யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.

# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 08

## First Term Examination – 2020 – Grade 08

| | | | | |
|---|---|---|---|---|
| புவியியல் | 61 | T | I, II | இரண்டு மணித்தியாலம்<br>Two Hours |

சுட்டெண் Index No

## புவியியல்

பகுதி - I

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. ஞாயிற்றுத்தொகுதியானது அண்ணளவாக எத்தனை வருடங்களுக்கு முன் தோற்றம் பெற்றது?
   1)460மில்லியன் வருடங்களுக்கு முன்
   2)4600மில்லியன் வருடங்களுக்கு முன்
   3)4600 வருடங்களுக்கு முன்
   4)46000 வருடங்களுக்கு முன்

2. ஒளியையும் சக்தியையும் தரும் சூரியன்?
   1)ஒரு கோள் 2)ஒரு உபகோள்
   3)ஒரு நட்சத்திரம் 4)ஒரு தூமகேது

3. சூரியனின் மத்திய பகுதி வெப்பநிலையானது
   1)15மில்லியன் $^{0}$c 2)15பில்லியன் $^{0}$c
   3)75 மில்லியன் $^{0}$c 4)75 பில்லியன் $^{0}$c

4. சூரியனின் ஒரு சுழற்சிக்கு எடுக்கும் புவி நாட்கள்?
   1)24நாட்கள் 2)25நாட்கள்
   3)24.5நாட்கள் 4)25.4நாட்கள்

5. ஞாயிற்றுத்தொகுதியில் மிகச்சிறிய மிகப்பெரிய கோள் எது?
   1)புதன்,செவ்வாய் 2)புதன்,வியாழன்
   3)புவி,புதன் 4)புவி,வியாழன்

6. உபகோள் அற்ற கோள்களைக் கொண்ட விடைத் தொகுதி?
   1) புதன்,செவ்வாய் 2)புதன்,யுரேனஸ்
   3)வெள்ளி,செவ்வாய் 4)புதன்,வெள்ளி

7. கிழக்கிலிருந்து மேற்காகச் சூழலும் கோள்கள்?
   1)வெள்ளி,யுரேனஸ் 2)வெள்ளி,சனி
   3)வெள்ளி,வியாழன் 4)யுரேனஸ்,சனி

8. அதிக வெப்பநிலையையும் அதிக உபகோள்களையும் கொண்ட கோள்கள் எவை?
1)புதன்,சனி 2)வெள்ளி,சனி
3)வெள்ளி,வியாழன் 4)புதன்,வியாழன்

9. புவியினைப் போன்று நான்கு மடங்கு பெரியது நீல நிறமாகிக் காட்சியளிக்கும் கோள் எது?
1)செவ்வாய் 2)சனி 3)வியாழன் 4)நெப்ரியூன்

10. அதிக உபகோள்களைக் கொண்ட சிறு கோள் எது?
1)சேரிஸ் 2)புளுட்டோ 3)மாக்கேமாக் 4)எரிஸ்

11. முதன்முறையாக விண்வெளிக்கு செயற்கைக்கோளினை அனுப்பிய நாடு எத?
1)ஐக்கிய அமெரிக்கா 2)ஐக்கிய இராச்சியம்
3)பிரான்ஸ் 4)சோவியத் சமவுடைமைக் குடியரசு

12. புவியின் சுழற்சி வேகம் யாது?
1)செக்கனுக்கு11.2கி.மீ 2)நிமிடத்திற்கு 11.2கி.மீ
3)செக்கனுக்கு 12.1கி.மீ 4)நிமிடத்திற்கு 12.2கி.மீ

13. கீழ்வரும் விடைத்தொகுதிகளில் சரியானதைத் தெரிவு செய்க?
1)மத்தியகோட்டுவிட்டம்- 12714கி.மீ, முனைவுவிட்டம்12756கி.மீ
2) மத்தியகோட்டுவிட்டம்- 12756கி.மீ, முனைவுவிட்டம்12744கி.மீ
3) மத்தியகோட்டுவிட்டம்- 12756கி.மீ, முனைவுவிட்டம்12714கிமீ
4) மத்தியகோட்டுவிட்டம்- 12756மீ, முனைவுவிட்டம்12714மீ

14. புவியின் அச்சு எத்தனை பாகை சரியாக அமைந்துள்ளது?
1)66½$^0$c 2)26½$^0$c 3)23½$^0$c 4)63½$^0$c

15. புவியானது தனது அச்சினைச் சுற்றி ஒரு முறை சுழல்வதற்கு எத்தனை பாகை நகர்வினைக் கொண்டது?
1)15பாகை 2)180பாகை 3)260பாகை 4)360பாகை

16. புவி $1^0$ யைக் கடந்து செல்வதற்கு எடுக்கும் நேரம்?
1)4நிமிடங்கள் 2)15நிமிடங்கள்
3)24மணித்தியாலயம் 4)30நிமிடங்கள்

17. நியம நேரத்தைப் பயன்படுத்துவதற்கு புவியானது எத்தனை நேரவலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
1)360நேரவலயம் 2)180நேரவலயம் 3)24நேரவலயம் 4)15நேரவலயம்

18. சர்வதேச திகதிக்கோடானது எக்கோட்டினை அடிப்படையாகக்கொண்டு குறிக்கப்பட்டுள்ளது?
1)கிறீன்விச்கோடு 2)180$^0$ நெடுங்கோடு 3)0$^0$நெடுங்கோடு 4)0$^0$அகலக்கோடு

19. முறிவடைந்து செல்லும் நெடுங்கோடு யாது?
1)சர்வதேச திகதிக்கோடு 2) கிறீன்விச்கோடு
3)ஆட்டிக்கோடு 4)அந்தாட்டிக்கோடு

20. சூரியன் மகரக்கோட்டிற்கு உச்சம் கொடுக்கும் காலம் யாது?
1) டிசம்பர்22 கோடைச் சூரியகணநிலைக் காலம்
2) ஜீன்21 மாரிச்சூரியகணநிலைக்காலம்
3) டிசம்பர்22 மாரிச் சூரியகணநிலைக் காலம்
4) ஜீன்21 கோடைச் சூரியகணநிலைக் காலம்

(2×20=40புள்ளிகள்)

## பகுதி - II

❖ **முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1) ஞாயிற்றுத்தொகுதியினை வரைந்து அனைத்து வான் பொருட்களையும் பெயரிட்டுக் குறிக்குக? (12புள்ளிகள்)

2)
- i. கோள்கள் என்றால் என்ன என்பதை விளக்குக? (4புள்ளிகள்)
- ii. அகக்கோள்கள்,புறக்கோள்கள் என்றால் என்ன? (4புள்ளிகள்)
- iii. அகக்கோள்கள்,புறக்கோள்கள் என்பவற்றைத் தருக? (4புள்ளிகள்)

3)
- i. a. புதன் தொடர்பான தகவல்கள் இரண்டு தருக?
  b. வெள்ளி தொடர்பான தகவல்கள் இரண்டு தருக? (4புள்ளிகள்)
- ii. a. செவ்வாயின் சிறப்புக்கள் இரண்டு தருக?
  b. செவ்வாயின் உபகோள்களின் பெயர்களைத் தருக? (4புள்ளிகள்)
- iii. புவியின் சிறப்புக்கள் நான்கு தருக? (4புள்ளிகள்)

4)
- i. a. சிறுகோள்கள் என்றால் என்ன?
  b. சிறுகோள்கள் 4 தருக? (4புள்ளிகள்)
- ii. குறுங்கோள்கள் என்பதனை விளக்குக? (4புள்ளிகள்)
- iii. ஞாயிற்றுத்தொகுதியில் காணப்படும் 8 கோள்களுக்குரிய உபகோள்களின் எண்ணிக்கைகளை வரிசைக்கிரகமாகத் தருக? (4புள்ளிகள்)

5)
- i. ஞாயிற்றுத்தொகுதி தொடர்பான நம்பிக்கையைத் தருக? (6புள்ளிகள்)
- ii. ஞாயிற்றுத்தொகுதி தொடர்பான நவீன அறிவினை உலகிற்கு தந்த அறிஞர்கள் நால்வரை தருக? (4புள்ளிகள்)
- iii. மேற்கூறிய விஞ்ஞானிகளில் ஒருவரின் முக்கிய கண்டுபிடிப்பினையும் கண்டுபிடிப்பாளரின் பெயரினையும் தருக? (2புள்ளிகள்)

6)
- i. புவியில் உயிரினங்கள் வாழ்வதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் 4தருக? (4புள்ளிகள்)
- ii. a. அகலக்கோடுகள் என்றால் என்ன?
  b. அகலக்கோடுகளை வரைந்து பெயரிடுக? (4புள்ளிகள்)
- iii. a. நெடுங்கோடுகள் என்றால் என்ன என்பதை விளக்குக?
  b. புவிச்சுழற்சியினால் ஏற்படும் விளைவுகள் எவை? (4புள்ளிகள்)

7)
- i. a. கிறீன்விச் நகரத்தில் நேரம் காலை 6மணி கிழக்கு நெடுங்கோடு $45^0$யில் நேரம் யாது?
  b. மேற்கு நெடுங்கோடு $60^0$யில் நேரம் யாது? (4புள்ளிகள்)
- ii. a. புவி ஒழுங்கு என்பதை விளக்குக?
  b. லீப் வருடம் என்பதை விளக்குக? (4புள்ளிகள்)
- iii.

| நாள் | சூரியன் உச்சம் கொடுத்தல் | காலம் |
|---|---|---|
| மார்ச் 21 | ………………………….. | இலைதுளிர்காலம் |
| ஜீன் 21 | ………………………….. | ………………… |
| செப்ரெம்பர் 23 | மத்தியகோடு | ………………… |

(4புள்ளிகள்)